©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 230] CHENNAI, THURSDAY, JULY 21, 2011
Aadi 5, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை**

**திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், கல்லொட்டு ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 4591/2010/அ2)*

**No. VI(2)/401(a)/2011.**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், கல்லொட்டு ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ம. ராகவேந்திரன் என்பவர் அவ்வூராட்சி மன்றத் துணைத்தலைவரின் கையொப்பத்தினை காசோலைகளில் போலியாகப் போட்டு ரூ. 1,99,470/– கையாடல் செய்தமைக்காக அவருக்கெதிராக 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205–ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்ட பின்னர் அவரின் மீதான குற்றச்சாட்டுக்கள், கல்லொட்டு ஊராட்சி மன்றத்தின் கருத்து ஆகியனவற்றை உரிய ஆவணங்களுடன் தன்னிச்சையாகவும் ஆழ்ந்தும் பரிசீலனை செய்து, இவர் மன்றத் துணைத்தலைவரின் கையொப்பத்தினை காசோலைகளில் போலியாகப் போட்டு ரூ. 1,99,470/–கையாடல் செய்து ஊராட்சி நிர்வாக அலுவலர்/ஊராட்சி மன்றத் தலைவருக்கான கடமையிலிருந்து தவறியுள்ளது நிரூபனமாவதாக எனது உளத்தேர்வின்படி தீர்மானித்து, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205 (11)–ன்கீழ் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இவரை கல்லொட்டு ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 262 (1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**அன்சுல் மிஸ்ரா,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

திருவண்ணாமலை,
**2011 ஜூலை 19.**

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU

DTP—VI-2 Ex. (230)